மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'Any matter' என்பதற்குள் நிற்காதீர்கள். 'Any matter before the House' அவை முன் விவாதத்தில் இருப்பதைப் பற்றிப் பேசுவதற்கே தவிர, அவைமுன் இல்லாததைப் பற்றிப் பேச முடியாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் இல்லாத பொருள் குறித்து விளக்கம் பெற வேண்டுமென்று சொன்னால் குறுகிய காலக் கேள்வி மூலம் பெறலாம் அல்லது 41-வது விதியின் மூலம் பெறலாம். இந்த இரண்டு வகைகளிலே ஒன்றின் மூலந்தான் கேட்க முடியும்.

THIRU J. JAMES : Under rule 41, I have given notice.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு விஷயம். 41-வது விதியின்படி கொடுக்கப்பட்ட தீர்மானத்திற்குப் பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்திருக்கிறாரா இல்லையா என்பது வேறு விஷயம்.

(6) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(ஆ) கூட்டாய்வுக் குழுவிற்குச் சென்று வந்த தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவை எடுத்துக் கொள்ளாததைக்குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ் : No, No. பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த அவையில் ஓராண்டுக் காலத்திற்கு முன்னதாக தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு . . . . (மணி அடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் விதிமுறைகளில் ஏதாவது மாறியிருந்தால் இந்த அவையில் விதிமுறைகளுக்கு மாறாக நடக்கின்ற நிலை இருந்தால் அதைக் குறிப்பதற்குத்தான் பயன்படுத்த வேண்டும்.

THIRU J. JAMES : I will explain. I think I am within my limits. If I am not within my limits, the Hon. Speaker can overrule it. எப்போது

1973 ஆகஸ்ட் 13] *[திரு. ஜே. ஜேம்ஸ்]*

செலக்ட் கமிட்டி அரசாங்கத்திற்கு அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டதோ உடனடியாக அது இந்த மன்றத்தில் வைக்கப்பட வேண்டும், அதுகுறித்து விவாதிக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது. தனியார் பள்ளி பாதுகாப்பு மசோதா மீது ஜாயின்ட் செலக்ட் கமிட்டி அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் கொடுத் திருக்கிறது. அந்த பில் இதுவரை இந்த மன்றத்தில் வைக்கப்படவில்லை. அதற்கான காரண காரியங்கள் யாவை என்பதைக் கல்வியமைச்சர் அவர்களிடத்தில் இருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த அவையில் நடக்கின்ற நடைமுறையைப் பற்றித்தான் ஒழுங்குப் பிரச்சினை யாக எழுப்ப முடியும். உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு என்னால் பதில் அளிக்க முடியும் என்றாலும் அது முறை அல்லாத காரணத்தால் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் அவர்கள் இரண்டு முறைகளிலே அதாவது குறுகிய காலக் கேள்வி மூலமோ அல்லது 41-வது விதியின் மூலமோதான் விவரங்களைக் கோர முடியும். இது பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செலக்ட் கமிட்டியிலிருந்து அறிக்கை வரவில்லை. அந்தக் கமிட்டி அறிக்கையை இந்த நேரத்திற்குள் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்ல முடியாது. அந்த அறிக்கை கொடுத்த பிறகுதான் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும். திரு. ஜேம்ஸ் அவர்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

(இ) அவை உரிமைக் குழு, நாத்திகம் நாளிதழ்குறித்து கொடுத்த அறிக்கையின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது குறித்து

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கடந்த ஓராண்டுக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் 'நாத்திகம்' நாளிதழ் மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்து இந்தச் சட்டமன்றத்தின் மூலம் உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. உரிமைக் குழுவும்